## அத்தியாயம் 4

# பவுலின் தற்காப்பு உரை மற்றும் மறுப்பு உரை

மனித ஞானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தபடியினால் கொரிந்து சபையில் பிரிவினைகள் தோன்றிக் கொண்டிருந்தது. ஆகவே பவுல் தன்னுடைய வாசகர்களைக் கடிந்துகொண்டு பல வருடங்களுக்கு முன்னர் அவர் அவர்களுக்கு உபதேசித்துச் சொன்ன நற்செய்திக்கு திரும்பும்படி எச்சரித்தார்.

பிரிவினைகளினால் கடினமான ஒரு சூழ்நிலையை பவுல் சந்திக்க நேரிட்டது. மட்டுமல்லாமல், பவுல் தன்னுடைய அதிகாரத்தைக் குறித்தும் மற்றொரு பிரச்சனையையும் தெளிவுபடுத்தும் அவசியமும் ஏற்பட்டது. ஏனெனில் சிலர் பவுலின் அதிகாரத்தை எதிர்த்து வந்தனர். அதன் விளைவாக, அப்போஸ்தலனாகிய பவுல் தன்னைக் குறித்தும், கர்த்தரோடும் கொரிந்து சபையாரோடும் தனக்கு உள்ள உறவைக் குறித்தும் விளக்கிச் சொல்லும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார்.

இப்பிரச்சனைகளை பவுல் கையாண்ட முறையிலிருந்து இன்றைய சபை கற்றுக்கொள்ள வேண்டும். பொதுவாக, உண்மையை தேடும் நபர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருளை பாரபட்சமின்றி ஆராய்ந்து அறிந்து கொள்வது உதவியாக இருக்கும். தேவனைக் குறித்தும் அவரோடுள்ள ஒருவரது உறவை குறித்தும் ஒருவர் தேடுகிற போது உலக பற்றின்மை ஒரு கடமையாகிறது.

தேவனைக் குறித்த உண்மையை ஒருவர் ஏற்றுக் கொள்ளுகிறபோது அது அவரது வாழ்க்கைக்கான வழிமுறைகளை வரையறுக்கிறது. மனிதராக இருப்பதன் பொருள் என்ன, பிறரை எப்படி நடத்த வேண்டும், தேவ எதிர்பார்ப்பு என்ன, போன்ற கேள்விகளை முற்றும் துறந்த நிலையில் வாழும் ஒருவரால் அணுக இயலாது. இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க தனிப்பட்ட வாழ்வின் ஈடுபாடு அவசியம். ஆவிக்குரிய தலைவர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட தலைப்பிலிருந்து விலகி இருப்பது ஊக்குவிப்பதில் தோல்வியை தரும், மட்டுமல்லாமல் அது மன்னிக்க இயலாதது.

பவுல் கொரிந்தியருக்கு எழுதின இந்த கடிதத்தில், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் எல்லா காரியங்களிலும் மற்றும் பாவிகள் தேவனோடு ஒப்புரவாக தேவையான எல்லா காரியங்களிலும் பவுலின் அர்ப்பணிப்பை நாம் காண முடியும். சபையார் தன்னைக் குறித்து

என்ன நினைக்கிறார்கள் என்பதும், அவர்களுடைய கீழ்ப்படிதலும், கிறிஸ்துவின்மேல் அவர்கள் கொண்டுள்ள விசுவாசமும் ஒருமித்து கட்டப்பட வேண்டும் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். விமர்சகர்களுக்கு உரையாற்றி தன்னுடைய ஊழி யத்தை தற்காப்பது அப்போஸ்தலனுக்கு சங்கடமாக இருந்தாலும் அது கட்டாயமானது என்பதை அவர் அறிந்திருந்தார்.

## பணியாள்த்துவம் எதிராக கர்வமான தீர்ப்பு (4:1-5)

**1இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். 2மேலும், உக்கிராணக்காரன் உண்மை உள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். 3ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது, நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. 4என்னிடத்தில்நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை, என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. 5ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள், இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார், அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.**

**வசனம் 1.** முன்பு, பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் ஊழியக்காரரென்று அழைத்திருக்கிறார் (3:5), அங்கு διάκονοι (*diakonoi*) என்ற பொதுவான வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இது 4:1ல் பயன்படுத்திய ஊழியக்காரரென்ற (ὑπηρέται, *hupēretai*) வார்த்தையை விட சற்று வித்தியாசமானது; இந்த கிரேக்க வார்த்தை ஒரு அரசு அதிகாரி அல்லது ஒரு மருத்துவருக்கு உதவியாளராக பணிபுரிகிறவரை சுட்டிக்காட்ட சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகிறது. பவுலின் முதல் மிஷனெரி பயணத்தில், பவுலுக்கும் பர்னபாவுக்கும் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவான் "உதவிக்காரனாயிருந்தான்" (ὑπηρέτης, *hupēretēs*;[1] அப். 13:5). அது ஒரு தாழ்மையான நிலை. பவுல் தனக்கும் அப்பொல்லோவிற்கும் உதவியாளர் என்ற நிலையைத் தவிர வேறு எந்த ஒரு அந்தஸ்தையும் விரும்பவில்லை என்பதை இந்த வார்த்தையின் பொருள் வெளிப்படுத்துகிறது. இருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பணியில் வெறும் ஊழியக்காரர்களே.

பவுல் மற்றும் அப்பொல்லோ ஆகிய இருவரும் **ஊழியக்காரர்கள்**;

அவர்கள் தங்கள் ஊழியத்தை தீவிரமாக செய்தார்கள். அவர்கள் கர்த்தருடைய உதவியாளர்கள், அதே வேளையில் அவர்கள் கர்த்தருடைய **உக்கிராணக்காரர்கள்** (οἰκονόμοι, *oikonomoi*), எஜமானுடைய கட்டளையை நிறைவேற்ற பாடுபடும் முகவர்கள். இயேசு அவர்களிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் சேவையில் கொரிந்து சபையாருக்கு ஆற்ற வேண்டிய ஊழியம் அவர்களுக்கு ஒரு கடமையாக காணப்பட்டது. அவர்கள் ஊழியக்காரர்கள், அதே வேளையில் **தேவனுடைய இரகசியங்களை** வெளிப்படுத்தும் கர்த்த ருடைய உக்கிராணக்காரர்கள். “இரகசியங்கள்” என்று பவுல் குறிப்பிடுவது எபேசியர் 3:5-8ல் தெளிவாக விளக்கிச் சொல்லப் பட்டுள்ளது:

> அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம், இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புற ஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

கிரேக்க சமயங்களின் தெய்வங்களான டெமிற்றர் மற்றும் ஐசிஸ் போன்றவர்களின் இரகசிய கொள்கைகளுடன் கொரிந்து பட்டணத்து புறஜாதி மக்களுக்கு தொடர்பு இருந்தாலும், இந்த சந்தர்ப்பத்தில் கிரேக்க இரகசிய மதங்கள் பற்றிய எந்த குறிப்பும் சொல்லப்படவில்லை.

**வசனம் 2.** கொரிந்து அல்லது பிற இடங்களில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் செய்யவேண்டிய ஊழியத்தில் எந்த பாடுகள் ஏற்பட்டாலும், அவருடைய முதல் அர்ப்பணிப்பு அவர்களை விலைக்கிரயம் கொடுத்து வாங்கிய கர்த்தருக்கே. பவுல் தன்னுடைய ஊழியத்தின் விவரங்களை குறிப்பிடவில்லை என்றா லும், அந்த ஊழியத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்ற உறுதியை வெளிப்படுத்துகிறார். இந்த **உண்மை உக்கிராணக்காரர்களிடம்** எதிர் பார்க்கப்படுகிற ஒரு காரியம். உக்கிராணக்காரர் என்பவர் சொத்துக்களின் பொறுப்பாளியாக நியமிக்கப் பட்ட ஒரு வேலைக்காரன். அவன் உரிமையாளர் அல்ல, ஆனால் உரிமையாளர் இல்லாத நேரங்களில் அவரது அலுவல்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ளவர்.

பவுல் உக்கிராணக்காரர் குறித்து எழுதுவதற்கும் சுமார் 20

வருடங்களுக்கு முன்பாக, ஆவிக்குரிய உண்மைகளை கற்றுக்கொடுப்பதற்கு உக்கிராணக்காரரின் பங்கை பயனுள்ளதாகக் கண்டார் இயேசு. ஏமாற்றுவதில் கையும் களவுமாக பிடிக்கப்பட்ட ஒரு உக்கிராணக்காரருடைய கதையைச் சொல்லி, ஒரு மனிதனுக்கு ஆஸ்திகளோடு உள்ள தொடர்பை விளக்கிப்பேசினார் (லூக். 16:1-9). மற்றொரு சந்தர்ப்பத்தில், கர்த்தர் நியாயத்தீர்ப்பை குறித்து எச்சரிக்கும்போது பின்வரும் கேள்வியை கேட்டார், “பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமும் உள்ள விசாரணைக்காரன் யாவன்?” (லூக். 12:42). பவுல் கிறிஸ்துவோடு பெற்ற உறவை உக்கிராணக்காரன் என்ற பார்வையிலே புரிந்துகொள்கிறார் (கலா. 1:15, 16). அப்போஸ்தலர்கள் எல்லாரும் உக்கிராணக்காரர்கள் என்று சொல்லலாம். இருப்பினும், பரந்த நோக்கில், உக்கிராணக்காரன் என்ற கொள்கை அனைத்து கிறிஸ்தவ வாழ்விற்கும் பிரயோஜனமுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் உண்மையுள்ள உக்கிராணக்காரனாக செயல்பட வேண்டும் என்று பேதுரு சுட்டிக்காட்டுகிறார் (1 பேதுரு 4:10).

**வசனம் 3.** பவுலின் குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதினால் தங்களை நியாயப்படுத்துவதாக சிலர் நம்பினர். அவர்கள் பவுலின் போதனையின் பொருளுக்கு சவால் விடுக்கிறார்கள் என்பது சாத்தியமில்லாதது. அவர்களது விமர்சனங்கள் அதிகமாக பவுலின் போதனை முறையை சுட்டிக்காட்டுகிறது. பவுல் நன்றாக பேசவில்லை அல்லது அவரது தோற்றம் மற்றும் வாதம் அசாதாரணமானது என்று அவர்கள் நினைத்தார்கள். தங்கள் குடும்பத்தில் அல்லது அண்டை வீட்டில் உள்ள ஞானிகளோடு பவுலை ஒப்பிடுவது சிலருக்கு சங்கடமாக தோன்றலாம்.

அப்போஸ்தலன் தன்னுடைய பேச்சை விமர்சிப்பவர்கள் சின்னத்தனமான வழிகளில் செயல்படுவதை பார்க்கிறார். அவர்களுடைய தீர்ப்புகள் மிகவும் சின்னத்தனமானது என்று அவர் வலியுறுத்தினார். அத்தீர்ப்புகள் பவுலை சற்றும் சங்கடப் படுத்தவில்லை. பென் விதரிங்டன் III என்பவர் அதை பின் வருமாறு சித்தரிக்கிறார்:

> பவுலை நியாயந்தீர்க்க அவர்களுக்கு உரிமை உண்டு என்று தங்கள் மனதில் எண்ணினார்கள். ஏனெனில், சொல்லாட்சிக்கலைஞர்களிடமும் அவர்கள் விவாதங்களிடமும் பார்வையாளர்கள் அப்படியே செய்தனர். தீர்ப்பு என்ற குறிப்பு பவுல் தேவனுடைய அதிகாரபூர்வமான முகவர் என்பது அவரது ஊழிய முறையை சார்ந்தது அல்ல - ஆனால் அவருடைய வார்த்தைகளிலும் அவரது தனிப்பட்ட முன்னிலையிலும். சுருங்கச்சொன்னால், அவர் ஒரு முரட்டுத்தனமான சொல்லாட்சிக் கலைஞர்.[2]

மற்றவர்கள் தன்னுடைய ஊழியத்தைக் குறித்து என்ன எண்ணுகிறார்கள் என்பதை குறித்து பவுல் கவலைப்படவில்லை என்று முடிவு செய்வது ஒரு தவறான அணுகுமுறை ஆகும். எந்த ஒரு ஊழியக்காரனும் தன்னுடைய தனிப்பட்ட நடக்கையை குறித்து பதில் அவசியமானது, ஒரு அப்போஸ்தலனாக பவுலுக்கும் அது பொருந்தும். இந்த அடிப்படையை தான் பவுலின் எதிரிகள் அவரை நீயாயந்தீர்ப்பதற்கு பயன்படுத்தினர், அது அவரை கலங்கச் செய்தது. பவுலின் போதனை முறையும் பாங்கும் அவர்களுடைய விமர்சனங்களின் மையமாக காணப்பட்டது. இதுபோன்ற சிறு விவரங்களே மனிதனுடைய பார்வையில் முக்கியமானதாக தோன்றுகிறதே அன்றி சுவிசேஷத்தை பிரசங்கிப்பது அல்ல. அப்போஸ்தலன் கூறினார், உண்மையில், நான் என்னை நானே ஆராய்வதில்லை. பவுல் அப்போஸ்தலனுடைய செய்தியின் விளக்கம் என்னவெனில் நியாயந்தீர்த்தல் கர்த்தர் ஒருவருக்கே உரியது.

**வசனம் 4. என்னிடத்தில்நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்** என்ற பவுலின் வார்த்தைகளில் ஒருவிதமான தைரியம் பிரதி பலிக்கிறது. பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்த பலவீனங்களை மதிப்பீடு செய்தால் சில விமர்சனங்கள் செய்ய நேரிடும். பவுல் தான் குற்றமற்றவர் என்று கூறவில்லை. அதே நேரத்தில், அவரது உத்தமத்தை நிலைநாட்டுவதில் அவருக்கு எந்த தயக்கமும் இல்லை. கடவுளுக்கு முன்பாக அவரது கடமையின் விஷயங்களிலும், சத்தியத்தை அவர் விளக்கி கூறுவதிலும், அவருடைய கிறிஸ்தவ முன்மாதிரி நடக்கையிலும் பவுல் தனது எதிரிகளை எவ்வித வெட்கம் இன்றி எதிர்கொள்ள முடியும். “ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் ” என்று 4:16ல் கூறினார் (காண்க 11:1ஐ). பவுல் பாவத்தை நிராகரித்தார் என்றோ அல்லது பொருட்படுத்தவில்லை என்றோ கூறமுடியாது. “நான் மனிதன் தான்” என்று கூறி ஒழுக்கங்கெட்ட அல்லது நேர்மையற்ற நடத்தையை மன்னிக்க மறுத்து விட்டார். நற்குணங்களுக்கு அவர் ஒரு முன்மாதிரி என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.

அவருடைய சொல்லாட்சித் திறமை பற்றி பவுலுக்கு எந்தவிதமான தீர்ப்புகளும் இல்லை, ஆனால் தேவனோடு அவர் கொண்டிருந்த உண்மையில் அவர் வைராக்கியமாக இருந்தார். தேவனுடைய வார்த்தையை தன்னுடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக அவர் கருதினார். கிறிஸ்தவ போதகர்கள் தாங்கள் உபதேசிக்கும் வழியை விட்டு மற்றொரு வழியை தொடரும் போது சபை துன்பத்திற்குள்ளாகிறது. இருந்தாலும், பவுல் எச்சரிக்கையாக இருந்தார். அவர் உபதேசித்த வாழ்வுக்கும் அவரது நடைமுறை வாழ்விற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை அவர்

அறிந்திருந்தாலும் அவர் வாழ்ந்த வாழ்க்கையில் தவறுகளே இல்லை என்று கூறவில்லை. தேவனுக்கு முன்பாக மட்டுமே அவர் நியாயப்படுத்தப்படுவார் அல்லது கண்டிக்கப்படுவார். **என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே** என்று கூறினார். எப்படியிருந்தாலும், பவுலின் விமர்சகர்கள் அவரை நியாயந்தீர்க்க போதிய தகுதி படைத்தவர்கள் அல்ல.

**வசனம் 5. காலத்திற்கு முன்னே தீர்ப்புச் சொல்லாமல் கர்த்தர் வருமளவும்** காத்திருங்கள் என்று பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, வேறுவிதமான தீர்ப்பைக் குறித்து உரையாற்றினார். உரிமையும் தகுதியும் இல்லாத விஷயங்களில் நீதிபதியின் விருப்பத்தை சபையின் அங்கத்தினர்களில் சிலர் கணித்துக்கொண்டிருந்தனர். மற்றவர்களின் நோக்கங்களையும் இருதயத்தையும் நியாயந்தீர்க்க வேண்டாம் என்று இயேசுவும் தன்னுடைய சீஷர்களை எச்சரித்தார் (மத். 7:1-5; காண்க யாக். 4:11). எனினும், பிரதான தூதனின் எக்காளம் ஒலிக்கும் வரையில் எல்லா விதமான தீர்ப்புகளையும் நிறுத்தி வைக்க வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லவில்லை. பவுல் தன் கடிதத்தை முடிக்கும் முன்பாக, கொரிந்து சபையில் ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருந்தான் என்று அறிந்து அவனை நியாயந்தீர்க்க அவர்களை ஊக்கப்படுத்துகிறார் (5:1-5), சகோதரர்களுக்கு இடையிலான வழக்கைதீர்க்க (6:5), ஒழுக்கக்கேடான விஷயங்களை கண்டுபிடித்து அவைகளை விட்டு விலக ஊக்கப் படுத்துகிறார் (காண்க 6:15).

கர்த்தருடைய வருகையின்போது, உலகின் முடிவு வரும். மேலும், **இருளில் மறைந்திருக்கும்** காரியங்களை கிறிஸ்து **வெளிச்சத்திற்கு** கொண்டு வருவார். மனிதர்களுடைய **இருதயத்தின்** நோக்கங்களை **வெளிப்படுத்த** தகுதி உள்ளவர் கிறிஸ்து ஒருவரே. கிறிஸ்துவின் தோற்றம் என்பது உலகின் முடிவோ அல்லது மீட்கப்பட்டவர்களுக்கான நித்திய வாழ்க்கையின் தொடக்கம் என்றோ பவுல் வாதாடவில்லை. இதையே அவர் வெளிப்படுத்தினார். பரிசுத்தவான்களுடைய எடுத்துக் கொள்ளப் படுதல், பூமியின் மேல் கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சி, அர்மகெதோன் யுத்தம், யூதர்கள் இஸ்ரவேலில் உறுதிப்படுதல், அல்லது எருசலேமில் புதிதாக கட்டப்பட்ட தேவாலயத்தில் ஆசாரியர்கள் பலி செலுத்துதல் போன்றவைகளை குறித்த எந்த மர்மமான இரகசியங்களையும் பவுல் இங்கு குறிப்பிடவில்லை. இந்த உபதேசங்கள் வேதாகமத்திலும் இல்லை. புதிய ஏற்பாட்டில் கடைசிக்காலக் கொள்கை (eschatology)[3] இரண்டு காரியங்களை சுட்டிக்காட்டுகிறது. (1) கடைசிக்கால நிகழ்வுகள் தேவன் ஒருவரே எல்லாவற்றின் மேல் அதிகாரமுடையவர் என்பதை வலி யுறுத்தும்படி சொல்லப்பட்டவைகள். அவர்

தேர்ந்தெடுக்கும் முடிவில் உலகத்தை இயக்குகிறார். (2) மனித வாழ்வின் முடிவைக் குறித்த அறிவு தேவபக்தியுள்ள வாழ்க்கையின் அவசரத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. கிறிஸ்தவர்களை பேதுரு பின்வருமாறு சொல்லி உற்சாகப்படுத்துகிறார், “நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்!” (2 பேதுரு 3:11).

## பவுல் எதிராக பிரிவினைவாத கொரிந்தியர்கள் (4:6-13)

கொரிந்து சபையை அச்சுறுத்திக்கொண்டிருந்த பிரிவினையின் அடிப்படை என்னவெனில் ஒரு ஆசிரியருக்கு பதிலாக மற்றொரு ஆசிரியரை அவர்கள் தெரிந்தெடுத்ததின் விளைவு ஆகும். இந்த விசுவாசிகள் முரட்டுத்தனமான போட்டியால் மோதிக் கொண்டிருந்தனர். தன்னுடைய வேலைக்கும் அப்பொல்லோவின் வேலைக்கும் இடையிலான உறவை விளக்கிக் கூறும்போது, பவுல் நோய்க்கு சிகிச்சை அளிக்காமல் நோய்க்கான அறிகுறிகளுக்கு சிகிச்சை அளித்தார். கிறிஸ்துவின் ஆவி அவர்களை ஊடுருவிச் செல்லவில்லை என்பதற்கான ஆதாரமே அவர்களது பிரிவினை ஆகும். அவர்கள் சிலுவையின் சேவைப்பணியை விட்டுவிலகிச் சென்றார்கள். கருணையுள்ள அன்புக்கு பதிலாக போட்டி ஆதிக்கத் திற்கான ஒரு வாகனமாக சபை மாறியது. பவுல் அவர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை ஒரு முன் மாதிரியாக காண்பித்தார், ஆனால் அவர்கள் தங்கள் உலக நடத்தைகளை தக்க வைத்துக் கொண்டார்கள்.

ஒரு சிறிய முரண்பாட்டுக்கும் அதிகமாக, கொரிந்துவில் காணப்பட்ட சுயநல சுரண்டலுக்குப் பதிலாக அப்போஸ்தலர்களின் அர்ப்பணிப்பை சுட்டிக்காட்டி பவுல் தன்னுடைய வாசகர்களை பிரியப்படுத்தினார். அப்போஸ்தலர்களின் வார்த்தைகளினால் மட்டுமல்லாமல் அவர்களின் தியாகத்தினாலும் இயேசுவால் ஏவப்பட்ட அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையினாலும் சகோதரர்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டனர். அப்போஸ்தலிக்க அலுவலகம் அவருக்கு இன்றியமையானதாக்கினது எது என்பதை பவுல் தயக்கமின்றி எழுதினார். ஒரு அப்போஸ்தலனாக, சொல்லாட்சித் திறமையின் நன்மைகளைக் குறித்து பவுல் விவாதிக்கவில்லை. பலவீனம், பசி, குளிர், மற்றும் கடுமையான நடத்துதல் போன்றவைகளே பவுலின் விருப்பமாக காணப்பட்டது. திமிர்பிடித்த சண்டை மற்றும் போதகர்களின் பயனற்ற ஒப்பீடுகள் போன்றவைகளை விட்டு கிறிஸ்து அவர்கள் நடுவில் இருக்கிறார் என்பதை சான்றாக்க சபை முன்நோக்கி இயங்க வேண்டும்.

## எல்லோரும் சமம் (4:6, 7)

**6சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக் கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள்நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன். 7அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?**

**வசனம் 6.** என்னையும் அப்பொல்லோவையும் **திருஷ்டாந்தமாக வைத்து**, இவைகளை எழுதினேன் என்பது 3:6-11ல் சொல்லப்பட்டுள்ள விவசாயி மற்றும் சிற்பாச்சாரியின் உருவகமாயிருக்கலாம். இருப்பினும், இந்த உருவகங்களின் தாக்கங்கள் 1:10இல் தொடங்கிய விவாதத்தில் அடங்கும். கட்டிடக்கலை மற்றும் வேளாமை உருவகபேச்சில் இருந்து எடுக்கப்பட்ட உண்மைகள் இரண்டு ஆசிரியர்களுக்குள் இருந்த உறவையும், அவர்களுக்கு சபையாரோடிருந்த உறவையும் விளக்கிக் கூறுகிறது (3:4-11). போதகர்களின் சேவை மனப்பான்மையையும் கொரிந்தியருக்குள் காணப்பட்ட சிலரின் போட்டி மனப்பான்மையையும் வேறுபடுத்திக்காட்டுவதே அப்போஸ்தலனின் நோக்கம் ஆகும்.

"திருஷ்டாந்தமாக வைத்து" என்ற சொற்றொடரை குறிக்கும் கிரேக்க வார்த்தை, μετασχηματίζω (*metaschēmatizō*) ஆகும். பவுல் கூறியதற்கு ப்ரட்ரிக் வில்லியம் டான்கர் என்பவர் பின் வருமாறு பொழிப் புரை எழுதினார்: "அப்பொல்லோவையும் பவுலையும் குறித்த என்னுடைய போதனையை விளக்க வடிவில் தந்துள்ளேன்"[4] பவுலின் உருவகப் பேச்சில் மறைந்திருக்கும் வேண்டுகோள் என்னவெனில் அவருடைய வாசகர்கள் அவர்கள் ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தவைகளை உட்கொள்ள வேண்டும் என்பதே. சரீ ரமான சபையில் காணப்பட்ட பிரிவினைகளுக்கு காரணம் பவுல் மற்றும் அப்பொல்லோ என்பது எந்த வகையிலும் நியாயமற்றது.

பவுலும் அப்பொல்லோவும் பவுலின் ஒப்பீட்டுப் பொருளாக காணப்பட்டனர். அவர் கேபாவின் (பேதுரு) பெயரை குறிப்பிடவில்லை. அதிகாரங்கள் 1 முதல் 4 வரை "கேபா"வின் பெயர் இரண்டு முறையே குறிப்பிடப்பட்டுள்ளது (1:12; 3:22). அதே நேரத்தில், "அப்பொல்லோ"வின் பெயர் ஆறு முறை (1:12; 3:4, 5, 6, 22; 4:6) சொல்லப்பட்டுள்ளது. பெயர்களின் எண்ணிக்கையை விட முக்கியமானது "பவுலும் அப்பொல்லோவும் அடையாள அர்த்தத்தில" சொல்லப்பட்டிருக்கிறார்கள், ஆனால், அத்தருணத்தில் கேபாவை

பற்றிய எந்த ஒரு குறிப்பும் இல்லை. பவுல் கேபாவை அறிமுகப்படுத்தியது புனைவு நோக்கத்திற்காக மட்டுமே என்பது தெளிவாக தெரிகிறது. கட்சிகளை உருவாக்கியவர்கள் பவுலையும் அப்பொல்லோவையும் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொண்டதுபோல பேதுரு அல்லது கிறிஸ்துவையும் சார்ந்து கூடுதலாக ஒரு கட்சியையும் தொடங்கியிருக்கலாம். இத்தகைய பிரிவினைகள் மன்னிக்க முடியாதது. மேலும், "கேபாவின்" பெயரை பவுல் குறிப்பிடுவதை பேதுரு கொரிந்துவுக்கு வந்திருந்தார் என்பதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளமுடியாது.

6வது வசனத்தின் கடைசி பகுதி கண்ணுக்குப் புலப்படாதது. கிரேக்க சொற்றொடரின் நேரடி மொழிபெயர்ப்பை பின்வருமாறு தரலாம்: "... நீங்கள் எங்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் எழுதப்பட்டதற்கு அப்பால் அல்ல." இச்சொற்றொடரின் அர்த்தம் இதுதான் என்று அவர்கள் நம்புவதை வெளிக்கொண்டு வருவதற்காக "மிஞ்சுவதற்கு" அல்லது "அப்பால் செல்ல" போன்ற வார்த்தைகளைச் மொழி பெயர்ப்பாளர்கள் சேர்த்துள்ளனர். **எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்** (τὸ μὴ ὑπὲρ ἃ γέγραπται, *to mē huper ha gegraptai*) என்ற சொற்றொடருக்கு முன்பாக பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்ச்சொல்லின் முன்னிடையின் τό (*to*) அறிவுறுத்துதல் என்னவெனில் இச்சொற்றொடர் சபையில் உள்ள சிலரின் கவர்ச்சி வாசகம் என்பதாகும். கடினமான தெரிவுகள் செய்யப்படும் போது சபை பின்பற்றும்படி ஒரு வழிகாட்டி கொள்கையாக பவுல் அதை மாற்றியமைத்திருக்கலாம். NRSV பின்வருமாறு மொழி பெயர்க்கிறது: "... அதனால் நீங்கள் எங்கள் மூலம் 'எழுதப்பட்டதற்கு அப்பால் ஒன்றும் இல்லை'" என்ற சொற்றொடரின் அர்த்தத்தை கற்றுக்கொள்ளலாம்.

"எழுதப்பட்டவை" என்று பவுல் கூறும்போது அவர் எதைக் குறிப்பிடுகிறார்? பழைய ஏற்பாட்டை குறிப்பிடுகிறாரா? சுருக்கமான அறிவுரைக்கையேடு ஏதேனும் அவர்களுக்கு எழுதியுள்ளாரா? இயேசுவின் வாயிலிருந்து சொல்லப்பட்ட வார்த்தைகளின் தொகுப்புகளை அப்போஸ்தனாகிய பவுல் அவர்களுக்கு வைத்துச் சென்றிருப்பாரா? இன்றைய வாசகர்களால் இக்கேள்விகளுக்கு முழுமையான உறுதியுடன் ஒரு போதும் பதிலளிக்க முடியாது. ஆனால் போதகர்கள் கிறிஸ்துவின் ஊழியர்களாகவும் உக்கிராணக்காரர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை "எழுதப்பட்டவை" என்ற சொற்றொடர் உறுதியுடன் தெளிவுபடுத்துகிறது. அதிகாரத்திற்கோ அல்லது சொல்லாட்சிக்கலையின் முன்மாதிரிக்கோ அல்லது தத்துவ நுட்பங்களுக்கோ அல்லது பிரிவினைவாதத்தின் கவனஈர்ப்புக்கோ போதகர்கள் சார்பற்ற சுயாதீனமான ஆதாரங்கள் அல்ல.

"எழுதப்பட்டவை" என்ற சொற்றொடரை பவுல் எழுதும்போது

அவர் எதை குறிப்பிடுகிறார் என்பதை அறிய இப்பகுதியின் பின்னணியம் ஒரு குறிப்பை தருகிறது. 3:19, 20ல், "எழுதியிருக்கிறது ..." என்று குறிப்பிட்டு பவுல் இரண்டு வேத வாக்கியங்களை மேற்கோள் காட்டியுள்ளார் (யோபு 5:13; சங். 94:11). இவ்விரண்டு வேதவாக்கியங்களும் தேவஞானத்தை மனிதயோசனைக்கு மேலாக உயர்த்துகிறது. கொரிந்தியர்கள் மற்றவர்களுக்கெதிராக ஒருவருக்கொருவர் அகந்தை கொண்டு எழுதப்பட்டவைகளுக்கு அப்பால் சென்று விட்டார்கள். ஆகவே, தேவனால் வெளிப்படுத்தப்பட்ட ஞானத்தை சார்ந்திருக்கும்படி பவுல் அவர்களை ஊக்கப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களிலும் ஏவப்பட்ட போதகர்கள் மூலமாக கிறிஸ்து வெளிப்படுத்தியவைகளிலும் அந்த ஞானம் அடங்கியிருக்கிறது. இந்த போதனைகளை தாண்டி செல்லுவது ஆபத்தான ஒன்றாகும்.

**வசனம் 7.** தனக்கும் அப்பொல்லோவிற்கும் மற்ற பிரசங்கிகளுக்குமிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தியதற்கு மட்டுமல்ல, நியாயந்தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டமைக்கும் பவுல் கொரிந்தியர்களை குற்றப்படுத்தினார். 4:7ல் பவுல் மூன்று கேள்விகளை எழுப்பியிருக்கிறார், "யார்?"; "என்ன?"; "ஏன்?" **அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்?** என்னும் முதல் கேள்வி சற்று கடினமானது. அவர்களுடைய ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் குணத்தைப்பற்றி பவுல் குறிப்பிடுகிறாரா? "உங்களை மேன்மையானவர்களாக நியாயந் தீர்க்கும் தைரியம் யாருக்கேனும் உண்டா" என்ற குற்றச்சாட்டான கேள்வியா? இது தான் பெரும்பாலான மொழி பெயர்ப்புகள் தரும் உண்மை. "மற்றவர்களிடமிருந்து உன்னை வேறு படுத்துபவர் யார்?" (NIV) அல்லது "உனக்கு மேன்மை தருகிறவர் யார்?" (NAB). இந்த விளக்கத்தில் உள்ள ஒரு சிக்கல் என்னவெனில் இங்கு பயன் படுத்தப்பட்டுள்ள பிரதி பெயர்ச்சொல் பன்மை என்று ஒருவர் எண்ணலாம், ஆனால் கிரேக்க மொழியில் அது ஒருமையில் (σε, *se*) கொடுக்கப்பட்டுள்ளது.

மற்றொருபுறம், இக்கேள்வியை இன்னும் அதிக நேர்மறையாக புரிந்து கொள்ளலாம்: "உங்களிலே மேன்மைகளை உண்டாக்குகிறவர் யார்?" புரிந்து கொள்ளப்பட்ட பதில் "ஒருவரும் இல்லை! நியாயம் தீர்க்கும் அளவுக்கு ஒருவரும் உயர்ந்த நிலையில் இல்லை." இவைகள் அதன் பொருளாயிருந்தால், பன்மையான பிரதி பெயர்ச்சொல்லை ஒருவர் எதிர்பார்க்கலாம் மற்றும் அநேகமாய் ஒரு μή (*mē*, "not"), எதிர்மறை பதிலை சுட்டிக்காட்டலாம், ஒரு கேள்வியை அறிமுகம் செய்ய. கோர்டன் டி. ஃபீ (Gordon D. Fee) நம்புவது என்னவெனில் பவுல் கொரிந்தியர்களிடம் சந்தித்த பிரச்சனை அவர்கள் அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தை நிராகரித் ததே என்கிறார். அதன்படி, ஃபீ

(Fee) அந்த கேள்வி பின்வருமாறு மொழிபெயர்க்கவேண்டும் என்று வாதிடுகிறார்: "மற்றொருவனுடைய வேலைக்காரனை நியாயந்தீர்க்கும் நிலைப்பாட்டில் உன்னை வைக்க நீ யார் என்று உன்னை நினைக்கிறாய்?"[5] மீதிகேள்விகள் இந்த விளக்கத்திற்கு உதவி செய்கிறதாக அமைகிறது, ஆனால், ஒருமை பிரதி பெயர் பயன்பாட்டினால் தோன்றிய சிக்கலை அவரால் தீர்க்க முடிய வில்லை. அநேகமாய், கடிதத்தில் பெயர் சொல்லப்படாத ஒருவர் கொரிந்தியர்களில் பிரிவினைக்கு ஒரு தலைவராக இருந்திருக்கலாம். இது ஒருமை "நீ" என்ற பிரதி பெயர்ச் சொல்லை விளக்குகிறது.

கேள்விகளின் தன்மை எதுவாக இருந்தாலும், எதிர்பார்க்கப்படும் பதில் ஒத்திருக்கிறது: தேவனுக்கு முன்பாக எல்லா மனிதர்களும் சமம். எல்லோரும் தேவஅருளிலிருந்து பெற்றுக் கொள்ளுகிறார்கள். பவுல், அப்பொல்லோ, மற்றவர்களுடைய போதனைகளைக் கொண்டு இந்த சபையினர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். நீதிபதியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் உரிமை யாருக்கும் இல்லை. பிரிவினை மனப் பான்மையும் பிரபலமாக போட்டி மனப்பான் மையும், நன்றியுணர்வு இல்லாமையை விளக்குகிறது.

## மாட்சிமை இலட்சியம் அல்ல (4:8-13)

**8இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; அப் பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே.
9எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசி யானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.
10நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள், நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர்.
11இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்.
12எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்.
13தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.**

**வசனம் 8.** பவுலின் இந்த வார்த்தைகளை "வஞ்சப் புகழ்ச்சி" என்று அழைப்பது இலகுவானது: **இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே,**

**இப்பொழுது ஐசுவரிய வான்களாயிருக்கிறீர்களே.** “கடிக்கிற வடுச்சொல்” என்ற சிறப்புப் பெயர் கொடுக்கலாம். கொரிந்தியர்களிடையே காணப்பட்ட மெய்ப்பாட்டுணர்வை பவுல் இங்கு விவரிக்கிறார். இந்த வார்த் தைகளில் பல்வேறு மோதல்கள் பிரதிபலிப்பதை வர்ணனை யாளர்கள் பார்க்கின்றனர். கடைசிக்காலம் ஏற்கனவே வந்தாயிற்று என்று சகோதரர்களில் சிலர் நம்புகின்றனர், அதாவது அவர்கள் தற்போது ஆவியின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், அவர்களுடைய கருத்து பவுலின் அதிகாரத்திற்கு ஒரு சவாலாக இருந்தது. கொரிந்துவிலிருந்த அத்தகைய மோதல்கள், அப்போஸ்தலன் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில பிரச்சினைகளை விளக்குவதற்கு உதவும்.[6]

அப்போஸ்தலரின் அறிக்கைகள் மிகவும் கடுமையானதாக தோன்றுகிறது. **எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே**, என்று பவுல் கூறினார். அத்தகைய எண்ணங்களினால் அவர்கள் முட்டாள்கள் ஆகிறார்கள். பரிசுத்த ஆவியின் தனிப்பட்ட வெளிப்பாடுகளால் அவர்கள் உண்மையையும் தெய்வபக்தியையும் கண்டு பிடித்திருந்தால், சிலுவையின் செய்தி அவர்களுக்குத் தேவைப் படாது. 4:8, 9ல் உள்ள பவுலின் கண்டனம் “நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடி யால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் …” என்று 1:5, 6ல் சொல்லப்பட்டதற்கு முரண்பட்டிருக்கிறது. முன்னதாக, அவர் தேவனுடைய கிருபையின் மீது சார்ந்திருந்ததை பவுல் ஒப்புக் கொண்டார். இந்த கட்டத்தில், கிருபையை விட்டு விலகிய அவர்க ளுடைய வஞ்சிக்கப்பட்ட சுயாதீனத்தைக் குறித்து பவுல் தன்னுடைய வெறுப்பை வெளிப்படுத்தினார். தொடர்வதற்கு முன், அப்போஸ்தலன் இடை நிறுத்தி பின் வருமாறு கூறினார், நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும்; **அப்பொழுது உங்க ளுடனேகூட நாங்களும் ஆளுவோமே.** கிறிஸ்துவோடு ஆளுகை செய்வதற்கான ஒரு காலம் வரும் என பவுல் அவர்களுக்கு உறுதியளித்தார். அந்த நாளை அவர் துரிதமாக்க விரும்பினார். கர்த்தருடனான அவர்களுடைய ஆளுகை தொடங்கிய பொழுது பவுல் அவர்களுடன் இருந்தார்.

வஞ்சப்புகழ்ச்சி சில சமயங்களில் பவுல் பயன்படுத்திய ஒரு தற்காப்புமுறை (பார்க்கவும், உதாரணமாக, 2 கொரி. 11:1; 12:16). ஆனால் 1 கொரிந்தியர் 4:8ல் தற்காப்புமுறை ஒரு பிரச்சினையாக தோன்றவில்லை. பவுல் சபையின் ஆவிக்குரிய நலனில் அக்கறை கொண்டிருந்தார், இது அவருடைய அப்போஸ்தல அதிகாரத்திற்கு மிகவும் நெருக்கமாக காணப்பட்ட ஒரு காரியம். அவரது நடத்தை அவருடைய வாசகர்கள் பின்பற்றுவதற்கு ஒரு முன் மாதிரியாக

இருந்தது; ஆனால் அவர்கள் தங்கள் சொந்த வழியை பின்பற்றினர், கிறிஸ்துவால் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தையும் ஞானத்தையும் விட்டு விலகி உலகின் பார்வையில் முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரத்தையும் ஞானத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். பவுலைவிட சிறப்பான ஆன்மீக வழி காட்டிகளாக சபையின் கணிசமான பகுதி மக்கள் தங்களைக் குறித்து எண்ணிக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவோடுள்ள ஆளுகையை முழு அளவில் ஏற்கெனவே அவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்ற நம்பிக்கையை பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்தியதாக கூறினார்கள். அவர்களுடைய பார்வையில், வாழ்க்கையின் இக்கட்டான சூழ்நிலையுடன் உள்ள போராட்டத்தை அவர்கள் பின்தள்ளினர், ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் பின்னணியில் வாழ்ந்தனர். அதனால் சிற்றின்ப எண்ணங்கள் அவர்களை மேற்கொள்ள முடியாதது என்று நம்பினர். அவருடைய விமர்சகர்களின் ஆவிக்குரிய பகுத்தறிவையும் அதிகாரங்களையும் குறித்த உயர்ந்த மதிப்பீட்டை பவுல் நிராகரித்தார். முழுமையாக நிறைவேறிய ராஜ்யம் இன்னும் எதிர்காலத்தில் இருப்பதால் பவுல் அவர்களின் கருத்துக்களை உறுதியாக நிராகரிக்க முடியும்.

**வசனம் 9.** அப்போஸ்தல ஊழியம் என்பது மனிதர்கள் நடுவில் சிறப்பிடம் தேடுவதற்கான ஒரு ஊழியம் அல்ல என்று பவுல் விளக்குகிறார். தேவ அழைப்பைப்பெற்று அப்போஸ்தலனாக இருப்பது ஒரு கனமான ஊழியம்; மனிதன் நினைக்கிற விதமாக அப்போஸ்தல ஊழியம் எந்த கௌரவத்தையோ அல்லது எளிதான வாழ்க்கையையோ தருவதில்லை. பவுல் "ஏற்கெனவே திருப்தியடையவில்லை" (4:8); அவர் ராஜாவைப் போல ஆளுகைசெய்து இன்னும் ஐசுவரியவானாகவில்லை. உண்மையில், கொரிந்துவில் யாருமே அப்படி இல்லை. சிலர் பவுலுக்கு விரோதமாக நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றியது அவர்கள் கிறிஸ்தவத்தை தவறாக புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை தெளிவாக்குகிறது. கிறிஸ்தவத்தில் சிறப்பிடம் தேடுபவர்கள் கிறிஸ்துவிடமிருந்தும், அவருடைய அப்போஸ்தலர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டியவைகள் ஏராளம் உண்டு. பவுலுக்கும் அவரது எதிரிகளுக்குமிடையே உள்ள வேறுபாடு கூர்மையாக இருந்தது.

சண்டை வீரர்கள் போராடிய காட்சி அரங்கத்திலிருந்து பேச்சு வார்த்தைகளைப் பயன்படுத்தி, பவுல் அப்போஸ்தலர்களை **மரண** தண்டனையை பெற்றவர்களுடன் ஒப்பிட்டார். அவர்கள் **உலகத் துக்கு வேடிக்கையானார்கள்.** அரங்கங்களில் பொழுது போக்குப் பொறுப்பாளர்களானவர்கள் சில நேரங்களில் குற்றவாளிகளை கூட்டத்திற்கு முன்பாக அணி வகுப்பாக அழைத்துச் சென்றனர். மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்காக எந்தவொரு கண்ணியமும்

ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கைதிகளுக்கு இணையாக அப்போஸ்தலன் தன்னை ஒப்பிட்டார். தேவ **தூதர்களுக்கும் மனுஷருக்கும்** வெளிப்படையாக காட்சி அளிக்கையில், ஒரு பிற்பகல் பொழுது போக்கின் ஒரு பகுதியாக அவர் காட்சியளித்தார். அவர் ஒரு வேடிக்கை பொருளானார், பிற்பகல் பொழுதுபோக்கின் ஒரு பகுதி, திறந்த வெளியில் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். ஆயினும், அவருடைய வார்த்தைகள் சுய- பரிதாபத்திற்குரிய புகார்கள் அல்ல; மாறாக, அப்போஸ்தலருடைய பணி பிரபலமான புறஜாதி ஞானிகள் நினைப்பதுபோல கவர்ச்சியானது அல்ல என்று பவுல் கொரிந்தியர்களுக்குக் காட்டினார். அவரது எதிர்ப்பாளர்கள் ஒரு குறிப்பையும் தவறவிட முடியாது. பவுல், ஒரு அப்போஸ்தலனாக, இது போன்ற அவமானங்களை சகித்திருந்தால், அநேகமாக, அவர்களுடைய நியாயத்தீர்ப்பில் சற்று கூடுதலான இரக்கம் காட்டக் கேட்பது நியாயமானது.

**வசனம் 10.** வஞ்சப்புகழ்ச்சி இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப்போல செயல்படும். வார்த்தைகள் அல்லது நடத்தை அவரது இருதயத்தை ஊடுருவிச் சென்றது. அவர் தன்னை ஆதரித்தவர்களால் நொறுக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார். 4:10ல் **நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்** என்பதின் பொருள் என்னவெனில், "என் நோக்கங்களை கேள்வி கேட்டு, என் தடுமாற்றமான பேச்சைக் குறித்து சிரிக்கிற உங்களுக்கு, தேவனு டைய ராஜ்ஜியத்தின் தன்னலமற்ற சேவையைப் பற்றி தெரியாது." **கிறிஸ்துவில் புத்திசாலிகள்** என்று தங்களை நியாயந் தீர்த்தவர்களின் காயத்தை அவர் ஏற்கெனவே உணர்ந்திருப்பதாக பவுலின் குரல் சான்றளித்தது. அவருடைய எதிரிகளுக்கு முன்பாக அவர்களது துரோக நடத்தையை நிறுத்த வஞ்சப்புகழ்ச்சியை பயன்படுத்தினார், ஒரு கண்ணாடியில் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தினார். காயம் ஆற்றப்படுவதற்கு முன்னர், பவுலின் எதிரிகள் தங்கள் மிகுதியான பாவத்தை உணர்ந்து ஒப்புக்கொள்வது அவசியமாக இருந்தது. அப்படியிருந்தால் மட்டுமே அவர் உணர்ந்த அதே அவமான உணர்வை அவர்களும் உணர முடியும்.

பவுலை அவதூறு செய்தவர்கள் கிறிஸ்துவை கர்த்தர் என்று அறிக்கை செய்தது அவர்கள் புத்தி சாலித்தனத்தையும் பலத்தையும் விளம்பரப்படுத்தி அதன் மூலம் அங்கீகாரத்தையும் கௌரவத் தையும் பெறுவதற்கே என்று எண்ணினார்கள். "மாறாக," பவுல் சொன்னது என்னவெனில், "உலகத்தார் எங்களை முட்டாள்கள், பலவீனர்கள், கனவீனர்கள், பிரச்சனைக்குரியவர்கள் என்று சொல்வதை அப்போஸ்தலர்களாகிய நாங்கள் அனுமதிக்கிறோம்." என நம்மை வரையறுக்க அனுமதிக்கிறோம். "கிறிஸ்துவின் பொருட்டு" வருகிற எந்த விதமான அவமானங்களையும் சகிக்க நாங்கள் விருப்பம்

உடையவர்களாக இருக்கிறோம். எந்த விதமான உள்நோக்கங்களும் எங்களை அசைக்காது. ஆண்களும் பெண்களும் சத்தியத்தை அறிந்து இரட்சிக்கப்படுவார்கள் என்ற எண்ணத்தோடே நாங்கள் கிறிஸ்துவை சேவிக்கிறோம். **நாங்கள் பலவீனர் … நாங்கள் கனவீனர்** என்ற உலகத்தின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

**வசனம் 11.** அப்போஸ்தல ஊழியத்தின் அர்த்தத்தை புரிந்துகொள்ள நிதானமான பிரதிபலிப்பிற்கு வஞ்சப் புகழ்ச்சி இடம் தருகிறது. பெரும்பாலும் **பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும்**, நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர் களுமாயிருப்பது அர்த்தமுள்ளதாக காணப்படுகிறது. இவ்வார்த் தைகள் தற்பரிசோதனையின் வார்த்தைகளாக காணப்படுகிறது. 2 கொரிந்தியர் 11:23-29, மற்றும் 2 கொரிந்தியர் 6:3-10ல் மன்னிப்பு கோரும் எண்ணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. ஆனால் இங்கு அப்படி தோன்றவில்லை. எருசலேமின் சுக ஜீவியமும் அவருடைய சகபரிசேயர்களுடனான கலந்தா லோசனைகளும் மிகவும் பின்தள்ளப்பட்டன. சமீபத்தில், அனடோலியாவின் உயர்ந்த சமவெளியில் அவர் செலவிட்ட சூடான பகல்களையும் குளிர்ந்த இரவுகளையும் நினைவு கூர்ந்தார். அநேக நேரங்களில் தனியாக, இன்னும் சில வேளைகளில் ஒன்றோ அல்லது இரண்டோ கூட்டாளிகளுடன், ஒரு நாள் சுமார் 20 மைல் தூரத்தை கடந்து, எபேசு பட்டணத்தை சென்றடைய நீண்ட பிர யாணத்தை மேற்கொண்டார் (அப். 19:1). உணவுப்பற்றாக் குறை காணப்பட்டது, தேவையான பணம் அவரிடம் இல்லை, அவர் திறந்த வெளிகளில் ஓய்வெடுத்தார், வழிப்பறி திருடர்களை குறித்து எச்சரிக்கையாக இருந்தார். மேலும் எபேசுவில் யாரும் அவரை சந்தித்து அவருக்கு வரவேற்பு கொடுக்கவில்லை. வாசற்படியோ அல்லது மறைவான மூலை முடுக்குகளோ அவர் தங்கும் இடமாயிருந்தது. உடைகளை மாற்றுதலும் குளியலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஆடம்பரமாக காணப்பட்டது. **இந்நேரம் வரைக்கும்** அப்போஸ்தல ஊழியத்தின் பாரத்தை அவர் சுமந்தார். இது அவருடைய மரியாதையின் அடையாளமாக காணப்பட்டது. கடைசி வார்த்தையான தங்க **இடமில்லாதவர்கள்** (ἀστατέω, *astateō*), புதிய ஏற்பாட்டிலே இங்கு மட்டும்தான் காணப்படுகிறது. அலைந்து திரிதல் மற்றும் நிலையான இடம் இல்லாமையை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது.

**வசனம் 12.** கொரிந்துவின் உள்ள சிலர் பவுலை முதன்முதலாக ஆக்கில்லாவின் தொழில்பட்டறையில் சந்தித்ததை நினைவு கூர்ந்திருக்கலாம் (அப். 18:2, 3). எந்தவிதமான நன்கொடையையும் அவர் எதிர்பார்க்கவில்லை. தங்கள் **கைகளினாலே வேலைசெய்து**, அவரும் அவருடன் இருந்தவர்களும் அவர்களுக்கு தேவையான வற்றை சம்பாதித்தனர். அப்போஸ்தலருடைய உழைப்பைக் குறித்த எண்ணம்

அக்காலத்து கிரேக்க-ரோம பணக்கார நில உரிமையாளர்கள் மற்றும் தத்துவ ஞானிகளின் மனப்பான்மைக்கு எதிரானது. பவுலின் காலத்து ஞானிகள் கைகளால் செய்யப்படும் தொழிலை பகிரங்கமாக அலட்சியப்படுத்தினர்.[7] அவருடைய பங்காக, சகோதரர் ஒருவருக்கும் “பாரமாக இராதபடிக்கு இரவும் பகலும்” உழைத்ததை நிந்தையாக கருதவில்லை (1 தெச. 2:9). பாவத்தில் இழந்துபோன உலகத்திற்கு கிறிஸ்துவை கொண்டு வரும் பவுலின் முயற்சிக்கு முட்டுக்கட்டையிட முயற்சித்தனர் பவுலின் எதிரிகள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் நிந்தைக்கும் உபத்திரவத்திற்கும் உட்பட்டாலும், அவரது அருட்பணியில் விடாமுயற்சியோடு செயல்பட்டு தன்னுடைய எதிரிகளுக்கு உதவி செய்து அவர்களுக்கு ஆசீர்வாதமாக செயல் பட்டார்.

**வசனம் 13.** ஒரு அப்போஸ்தலனாக இருப்பது பகட்டான வாழ்க்கைக்கு முற்றிலும் முரண்பட்டது. கிறிஸ்துவால் பவுலுக்கு கொடுக்கப்பட்ட பணி அவருக்கு சமூக ஆற்றல் அல்லது கௌரவம் கொண்டுவரவில்லை; அதற்கு பதிலாக, மற்ற கன்னத்தை திருப்புவதையே சுட்டிக்காட்டியது, மற்றவர்கள் நிந்திக்கப்படும்போது ஊக்குவித்தல், மேலும் **உலகத்தின் குப்பையைப்போலவும்**, எல்லாரும் **துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவும்** நடத்தப்பட்டனர். பெரும்பாலான பழங் காலத்து ஆசிரியர்கள் புகழ், செல்வாக்கு மற்றும் அதிகாரத்தைத் தேடினர். அவர்களுடைய பார்வையில், அப்பொல்லோவின் கட்சியினர் அல்ல என்னுடைய கட்சியினரே என்பதை நிலைநாட்ட பவுல் போராட ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதே. ஆனால் பவுல் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபாடு காட்டவில்லை. அவரை தூஷித்தவர்கள் அவர்கள் விருப்பத்தின்படி செய்ய அனுமதித்தார். அவருடைய சமகாலத்து ஆசிரியர்கள் மகிமையாகவும் கௌரவமானதாகவும் எண்ணியவைகளை பவுல் முழுமையாக நிராகரித்தார். அவர் மனிதர்களுடைய புகழ்ச்சியை அல்ல கர்த்தருடைய புகழ்ச்சியையே தேடினார், அப்பொல் லோவையோ அல்லது கிறிஸ்துவை மகிமைப்படுத்தின எவரையாயினும் பவுல் மகிழ்ச்சியோடு கனப்படுத்தினார். அப்போஸ்தலருடைய சேவை செய்யும் அணுகுமுறை அப்பொல்லோவின் கட்சியினருக்கு ஆச்சரியமாகவும் சவாலாகவும் இருந்திருக்கும்.

## பவுல் அவர்களுடைய விசுவாச “தந்தையாக” (4:14-21)

கொரிந்துவிலிருந்த எல்லா கிறிஸ்தவர்களும் பவுலுக்கும் அவருடைய அப்போஸ்தல பணிக்கும் எதிர்ப்பாளர்களாக இல்லை. விசுவாசிகளை ஊக்குவிப்பதும் சரீரமாகிய சபையின் ஐக்கியத்தை கட்டிக்காப்பதும் அப்போஸ்தலரின் சவாலான பணியாக காணப்பட்டது. பவுல் தன்னுடைய வாசகர்கள் அவரோடுகூட

ஒருமித்து சகித்தவைகளை, ஒரு முடிவை கொண்டு வரும்படியான அவரது தீர்மானத்தை, அவர்களைக் குறித்த கரிசனைகளை, அவர்களுக்கு நினைவுபடுத்தும்படி இக்கடிதத்தின் இப்பகுதியில் தொகுத்து வழங்குகிறார்.

**14உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். 15கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவி சேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். 16ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். 17இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப் படுத்துவான். 18நான் உங்களிடத்திற்கு வருகிறதில்லை என்கிறதாகச் சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள். 19ஆகிலும் கர்த்தருக்குச் சித்த மானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர் களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன். 20தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. 21உங்க ளுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வர வேண்டுமோ?**

**வசனம் 14.** பவுல் கொரிந்தியருக்கு எழுதியவைகளில் சில உண்மையில் அவர்களுடைய வெட்கக்கேடான நடக்கையை குறிக்கிறது. கிறிஸ்துவின் சீஷர்கள் பவுலை நிராகரிப்பது வெட்கக் கேடானது, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள், தங்களை திருப்தியடைந்தவர்களாக, செல்வந்தனாக, ராஜாவாக (4:8) கற்பனை செய்து கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பவுலை மூடனாகவும் தங்களை ஞானிகளாகவும் எண்ணினர் (4:10). வஞ்சப்புகழ்ச்சி, சுற்றி வளைத்துப் பேசுதல், மற்றும் வெட்கம் போன்ற கருவிகளை பயன்படுத்த அப்போஸ்தலர் தயங்கிய தில்லை. இக்கடிதத்தின் பிற்பகுதியில், “உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன்” என்று இரண்டுமுறை சொல்லியிருக்கிறார் (6:5; காண்க 15:34).

பவுல் அர்த்தப்படுத்துவது என்ன? அவரது நோக்கம் அவர்களை **வெட்கப்படுத்துவது** அல்ல, ஆனால் அவர்களை கண்டிப்பதே. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்பதையே வெளிப்படையாக அவர் கூறினார். அவர்

அடிப்படையில் சொன்னார், "உங்களில் சிலரின் நடத்தை வெட்கக்கேடானது என்பதை நினைப்பூட்டுவது எனக்கு மகிழ்ச்சியானது அல்ல, ஆனால் வெட்கக்கேடான நடத்தையை அடையாளம் கண்டு கொள்வது, மனந்திரும்புதலின் முதல் படியாகும். உங்களைக் கண்டிப்பதே என் குறிக்கோள். என்ன வெனில், தேவனுக்கும் அவருடைய சபைக்கும் அவமானங்களை கொண்டுவருகிற பலவிதமான சிந்தனைகளையும் பழக்க வழக்கங்களையும் உங்களை விட்டு விலக்குவதே. நான் உங்களிடத்தில் அன்பு செலுத்துகிறபடியால், உங்களை வெட்கப்படுத்துவது ஒருபோதும் என்னுடைய நோக்கம் அல்ல."

**வசனம் 15.** பவுலுக்கு இணையான வேறொரு ஆசிரியர் கொரிந்தியர்களுக்கு இல்லை. மற்றவர்கள் அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியடையவும், வளரவும் உதவி செய்திருக்கலாம், ஆனால் அவர்கள் வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளாத நல்ல ஒரு உறவு வைத்திருந்தார். சபையில் நல்ல செல்வாக்கு பெற்ற சிலர் கிறிஸ்தவர்களின் நலன்களை தங்கள் இருதயத்தில் கொண்டிருக்கவில்லை. சத்தியத்தை கற்றுக்கொடுத்தவர்களை பவுலுடன் ஒப்பிட்டுச் சொன்னால் அவர்கள் வெறும் பாதுகாவலர்கள், பொறுப்பானவர்கள், அல்லது வழிகாட்டிகள் மட்டுமே. கிறிஸ்துவில் அவர்களுக்கு எண்ணற்ற **உபாத்தியாயர்கள்** இருந்திருக்கலாம், ஆனால், **தகப்பன்மார் அநேகர்** அவர்களுக்கு இல்லையே. பவுல் விசுவாசத்தில் அவர்கள் தகப்பன். உபாத்தியாயர்கள் என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை (παιδαγωγός, *paidagōgos*) தான், கலாத்தியர் 3:24, 25ல் அப்போஸ்தலர்களை குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற "உபாத்தியாய்" இருந்தது என்று குறிப்பிடுகிறார். கலாத்தியரில் உள்ள இரண்டு இடங்களைத் தவிர, புதிய ஏற்பாட்டில் இங்கு மாத்திரமே இந்த வார்த்தை காணப்படுகிறது.

கொரிந்தியருக்குப் போதித்த அனைவருக்கும் மரியாதைக்குரிய விசாரணை தேவைப்பட்டது, ஆனால் பவுலுடன் தனித்த உறவு இருந்தது. அவரே அவர்களை ஆவியினால் பெற்றார். முதலில் அவர்களை கிறிஸ்துவிற்கு அறிமுகப்படுத்தினது பவுல் என்பதே அவர்களுடைய சிறப்பு கவனத்திற்குக் காரணமாக இருந்தது. பவுல் கொரிந்தியர்மேல் வைத்திருந்த கரிசனை தகப்பன் தன் பிள்ளைகள் மேல் வைத்திருந்த கரிசனையைப் போன்றது. இருப் பினும், அவரது பங்கு கடுமையாக சர்வாதிகாரியானது அல்ல. "நீங்கள் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும். நான் சொல்வதை நியாயப்படுத்த அவசியம் எனக்கில்லை, ஏனெனில் நான் தான் உங்களுக்கு பொறுப்பாளியாக இருக்கிறேன்" என்று அவர் சொல்லவில்லை. மாறாக, பவுல் அவர்களிடம் மரியாதையைத் தேடினார். அவர்களுடைய ஆன்மீக

தகப்பனாக இருந்தபடியால், கர்த்தரால் அவருக்கு ஒப்படைக்கப் பட்ட உக்கிராணத்துவத்தை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது.

கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் ஆன்மீக தலை வர்களுக்கும் இடையே உள்ள உறவு கீழ்ப்படிதல் மூலம் மட்டும் அளவிடப்படுகிறதில்லை என்பதை நினைப்பூட்டுவதாக பவுலின் வேண்டுகோள் காணப்படுகிறது. பவுல் பின்வருமாறு தெசலோனிக்கியருக்கு எழுதினார், “அன்றியும் சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம் ...” (1 தெச. 5:12, 13). தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டி எழுப்புவதற்கு தங்கள் ஆற்றலை அர்ப்பணித்த மூப்பர்களுக்கும், சுவிசேஷகர்களுக்கும், மற்றவர்களுக்கும் இந்த வார்த்தைகள் பொருந்துகின்றன. சபையின் மூப்பர்கள் என்பவர்கள் ஒரு இயக்குநர்களின் குழு அல்ல; அவர்கள் மந்தையை குறித்த கரிசனையுள்ள மேய்ப்பர்களும் அன்பினிமித்தம் உழைக்கிறவர் களாகவும் இருக்கிறார்கள்.

**வசனம் 16.** பவுல் கொரிந்தியருக்கு கடிதம் எழுதினபோது, புதிய ஏற்பாடு இன்னமும் உருவாகிக் கொண்டிருந்த நிலையில் இருந்தது. தேவ பக்திக்கு முன்மாதிரியான ஆசிரியர்கள் இன்றைய நிலையை விட அன்று அதிக அவசியமாக காணப்பட்டது. போதிக்கிறவராக மட்டுமல்ல சுவிசேஷத்தை வாழ்ந்து காட்டும் முன்மாதிரியாகவும் அப்போஸ்தலர் தன்னை முன்வைத்தார் (காண்க 11:1; பிலி. 3:17). இந்த மனப்பான்மையுடன் தான் அவர்கள் நடுவில் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன் என்பதை இந்த “பிரியமான” சகோதரர்கள் (4:14) மனதில் பதிய வைக்க பவுல் விரும்பினார். அவர் அவர்களை எப்பொழுதும் தம் பிள்ளைகளைப்போல நேசித்து, அவர்களுக்காக கிறிஸ்துவின் முன்மாதிரியாக வைத்தார் **ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று** என்று ஊக்கப்படுத்தினார். டொனால்டு எ. கார்சன் (Donald A. Carson) பவுலின் சவாலை பின்வருமாறு தொகுத்தளிக்கிறார்: “மற்றொருவரை கிறிஸ்தவ விசுவாசத்தில் வழிநடத்தும் செயல் என்பது பயிற்சிநிலையில் காணப்படும் ஒருவருக்கு கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கு முன்மாதிரியாக இருப்பதாகும்.”[8] அவருடைய கடிதங்களில், அவர் ஒரு உத்தம மனிதர் என்பதை அப்போஸ்தலன் தொடர்ந்து நிரூபித்தார் (1 தெச. 2:1-12). அவர் என்ன சொன்னார், அவர் யார் என்பதைக் கொண்டே அவர்களுக்கு போதித்தார்.

சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் தங்கள் ஆசிரியர்கள் அவர்கள் சொந்த வாழ்வில் சுவிசேஷத்திற்கு ஒரு மாதிரியாக இருக்க வேண்டும்

என்று எதிர் பார்க்க எல்லா உரிமையும் உண்டு. "நான் சொல்வதைப் போல் செய்யுங்கள், நான் செய்வதைப்போல அல்ல" என்று சபையின் தலைவர்கள் சொல்வார்களானால் சபை சீர்செய்ய முடியாத வகையில் சீரழிந்து விட்டது என்று பொருள். எந்த ஒரு மூப்பர் அல்லது பிரசங்கியார், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, "என்னைப் பின்பற்றுகிறவர்களாக இருங்கள்" என்று கூற முடியாதோ, அவர்கள் தலைமைத்துவ பொறுப்பில் இருந்து விலகிவிட வேண்டும். பவுல் இந்த உண்மையை உணர்ந்து பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

**வசனம் 17.** பவுல் அவர் நடுவில் இல்லாத போது, அவருடைய போதனைகளுக்கு நினைப்பூட்டுதலாக இருக்கும்படி தீமோத் தேயுவை கொரிந்துவுக்கு அனுப்பி வைத்தார். இக்கடிதத்தின் வாழ்த்துரையில் தீமோத்தேயுவின் பெயர் சொல்லப்படவில்லை என்பதால், அவர் அப்போஸ்தலரின் உடனடி குழுவில் இருந்தார் என்பதற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது. பவுல் தீமோத்தேயுவை எரஸ்துவுடன் மக்கெதோனியா வழியாக கொரிந்துவுக்கு அனுப்பிவைத்தார் (அப். 19:22); ஆனால் பயணத்தின் நிச்சயமற்ற தன்மையினால், அப்போஸ்தலன் தன்னுடைய வருகையின் நேரத்தை குறித்து தெளிவாக சொல்லமுடியவில்லை, அல்லது அவரால் அங்கு சென்றடைய முடியும் என்ற நிச்சயமும் இல்லை. **தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்** என்று பவுல் எழுதினார்; ஆனால் தீமோத்தேயு பயணத்தில் இருக்கிறார் என்பதை உறுதியாக அவரால் கூற இயலவில்லை. 1 கொரிந்தியர் 16:10ல் தீமோத்தேயுவை குறித்த கூடுதலான குறிப்பிலிருந்து இது தெளிவாகிறது. பவுலின் இக்கடிதம் கொரிந்துவிற்கு சென்றடைவதற்கும் சிலநாட்களுக்கு முன்பு வரை தீமோத்தேயு கொரிந்துவை சென்றடைவார் என்று பவுல் எதிர்பார்க்கவில்லை. சில உள்ளூர் அவசர நிலைகள் காரணமாக தீமோத்தேயு கொரிந்துவிற்கான அருட்பணியை தள்ளிப்போட வேண்டுமென்ற நிலையை அவர் உணர்ந்தார். தீமோத்தேயு வந்தடைந்தால், பவுல் தன்னைவிட வயதில் இளைய உடன் ஊழியர் ஒருவருக்கு திறமை வாய்ந்த பயிற்சி வழங்கி யிருப்பதை மட்டுமே நம்ப முடியும். பவுல் எல்லா சபைகளிலும் போதித்தவைகளை தீமோத்தேயு நன்கு அறிந்திருந்தார். ஆவியானவரின் ஏவுதல் பெற்ற, அவர்களுக்குத் தேவையான அப்போஸ்தல வழி காட்டுதலை இங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு அவர் எடுத்துச் செல்ல வேண்டும். **நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை** தீமோத்தேயு **உங்களுக்கு ஞாபகப்படுத்துவான் என்று பவுல் கூறினார்**.

பவுல் அப்போஸ்தலன் 2 கொரிந்தியர் கடிதத்தை எழுதிய வேளையில் தீமோத்தேயு மீண்டும் வந்தடைந்தார், ஆகவே அக்கடிதத்தின் வாழ்த்துரையில் தீமோத்தேயுவின் பெயரை பவுல்

சேர்த்தார். தீமோத்தேயு கொரிந்தியருக்கு உதவுவதற்கு இயல்பான விருப்பத்தேர்வாக காணப்பட்டார். ஏனென்றால் அவர் முன்னதாக பவுலுடனும் சீலாவுடனும் இப்பட்டணத்தின் ஊழியத்தில் உடன் இருந்தார் (அப். 18:5; 2 கொரி. 1:19). தீமோத்தேயு உண்மையிலேயே கொரிந்துவுக்குத் திரும்பினாரா இல்லையா என்பதை வாசகர்கள் பவுலின் கடிதங்களிலிருந்து தீர்மானிக்க முடியாது. பவுலின் கடிதங்களில் அவரைப் பற்றிய செய்திகள் பரிந்துரைப்பது என்னவெனில் அவர் மிகவும் பயந்த சுபாவம் உள்ளவர் என்பதே (காண்க 1 தீமோ. 4:12-14; 2 தீமோ. 1:6, 7). சபையில் காணப்பட்ட கொந்தளிப்பை சமாளிக்க அவரது குணாதிசயம் போதுமானதாக இல்லை. தீமோத்தேயு அல்ல, தீத்துவே கொரிந்து பட்டணத்தில் உள்ள சபையைக்குறித்த செய்தியைக் கொண்டு வந்தார் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் கடிதத்தில் பார்க்கலாம் (2 கொரி. 1:1, 2; 7:6, 7). தீத்து சபையின் நிலைமையில் முன்னேற்றங்களைக் கொண்டுவர முடிந்தது; ஆனால் தீமோத்தேயுவின் வெற்றி நிச்சயமற்றது.

**வசனம் 18.** கொரிந்தியரில் சிலர் திமிர் பிடித்தவர்களாக மாறி மறுபடியும் மாம்சத்தில் பவுலை காண்பார்கள் என்ற கருத்தை மறுத்து விட்டார்கள். சுற்றித்திரியும் தத்துவ மேதைகளைப் போலவே பவுலை கருதினார்கள் - அதாவது அவர் அவர்களிடமிருந்து அனைத்தையும் பெற்றுக் கொண்டதினால், இனி அவர் திரும்பி வரப்போவதில்லை. ஆயினும், பவுல் தன்னைத் தெளிவாக விளக்கினார். அவரது நலனும் வாழ்வும் அவருடன் விசுவாசத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுடன் இணைந்திருந்தது. பிரபல தத்துவமேதைகளைப் போலல்லாமல், கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணித்த சீஷர்களின் கூட்டத்தை உருவாக்கவில்லை எனில் தன்னுடைய வேலையை கணக்கில் எடுத்துக்கொள்வதில் அர்த்தம் இல்லை என்று பவுல் எண்ணினார். அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பிறகு, கர்த்தருடைய கட்டளையின்படி வாழ்ந்த மக்களாக அவர்களுக்கு கற்பிக்க தீர்மானம் பண்ணிக் கொண்டார்.

**வசனம் 19.** தங்கள் மாம்ச ஞானத்தை வெளிப்படையாகக் காட்டியவர்கள் பவுலின் போதனையைப் பற்றி தவறாக புரிந்துகொண்டார்கள். ***நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து***, என்று அப்போஸ்தலன் அவர்களுக்கு உறுதியளித்தார். அவருடைய பயணம் கர்த்தருடைய சித்தமாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய ஒரே நிபந்தனையாக இருந்தது (காண்க அப். 18:21; யாக். 4:15ஐ). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்படாத ஒரு குறுகிய பயணத்தின் போது அவர் அந்த பட்டணத்தை சந்தித்ததாகத் தெரிகிறது. “குலோவேயாளின் வீட்டாருக்கு” (1:11) சொந்தமான கப்பலில் இருநாள் பயணத்தை

மேற்கொண்டு, தீவுதீவாக சுற்றித்திரிந்து கொரிந்து பட்டணத்தை வந்தடைந்திருக்கலாம். பவுல் எதிர்பார்த்ததைப் போல பயணம் அமையவில்லை. எதிரிகளால் அவர் இரக்கமின்றி தாக்கப்பட்டதை அவரது நண்பர்கள் மௌனமாய் நின்று வேடிக்கை பார்த்ததாக தெரிகிறது (காண்க 2 கொரி. 12:21ஐ).

**இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர் களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன்** என்று சொல்லி பவுல் எதை விளக்க விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக தோன்றுகிறது. இந்த "பெலன்" காட்டப்படுவதை பவுல் எவ்வாறு எதிர்பார்த்தார் என்பது தெளிவாக இல்லை. அற்புதமான வல்லமைகளின் ஒரு போட்டியை அவர் மனதில் வைத்திருந்தாரா (காண்க 13:2)? பரிசுத்தஆவி மூலம் அவர் கொண்டிருந்த அதே பெலத்தை அவரது எதிரிகள் வெளிப்படுத்த முடியும் என்று நிச்சயமாக அவர் நம்பவில்லை. அவர் தனது எதிரிகளை குருடராக்கத் திட்டமிட்டாரா?, சீப்புருதீவு மாயவித்தைக்கார னாகிய எலிமாவின் கண்களை குருடாக்கியது போல (அப். 13:11), அல்லது அவர் கிறிஸ்துவின் வார்த்தையின் வல்லமையைப் பற்றி பேசினாரா? அவர்களைத் தவறுதலாக நிரூபிப்பதன் மூலம் அவர்களை தாழ்த்துவாரா? அவர்களுடைய செயல்கள் மற்றும் சொற்களுக்கு இடையே உள்ள முரண்பாடு, அவர்கள் பெலத்தில் குறைந்தவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

**வசனம் 20.** இந்த பெலத்தைக்குறித்து பவுல் என்னவெல்லாம் சொல்லுகிறாரோ, ஆனால் இது **தேவனுடைய ராஜ்ஜியத்தைக்** குறித்தது. தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் போதனைகளுக்கு தூரமானது இல்லை. அதுவே இயேசுவின் உவமைகளின் மையக்கருத்தாக காணப்பட்டது (மாற்கு 4:26, 30) மற்றும் அதுவே மனந்திரும்புதலின் ஏவுதலாக காணப்பட்டது (மத். 3:2; மாற்கு 4:17). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும் நிருபங்களிலும், தீர்க்கத்தரிசனமாக அறிவிக்கப்பட்ட தேவனுடைய ராஜ்ஜியம் வந்துவிட்டது (கொலோ. 1:13). அதுவே இயேசு கட்டுவதாக அறிவித்த சபை (மத். 16:18). "தேவனுடைய ராஜ்ஜியம்" என்னும் சொற்றொடர் சுவிசேஷ நூல்களில் பிரபலமாக இருக்கும் அளவிற்கு நிருபங்களில் பிரபலம் இல்லை. "தேவனுடைய ராஜ்ஜியம்" என்பது "சபைக்கு" ஒப்பிடப்பட்டிருப்பதை நிருபங்களில் பார்க்க முடியும். தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிய போதனை என்பது அழகான வார்த்தைகளையோ புத்திசாலித்தனமான வாதங்களையோ சார்ந்தது அல்ல.

**பெலத்திலே** பற்றிய கேள்வி உரைப்பகுதியில் தொடர்கிறது. வாழ்க்கையை மாற்றும் வல்லமை கிறிஸ்துவுக்கு உண்டு, ஆனால் பவுல் அப்படிப்பட்ட பெலத்தை தான் குறிப்பிடுகிறாரா? அநேகமாக,

இயேசுகிறிஸ்துவின் வல்லமையை அல்லது பரிசுத்த ஆவியின் பெலத்தைக் குறிப்பிடுவதற்கு உருவகப் பேச்சாக “தேவனுடைய ராஜ்ஜியத்தை” குறிப்பிட்டிருக்கலாம். அது எந்த வல்லமையாயிருந்தாலும், பவுல் அதை பயன்படுத்த திட்டமிட்டார்.

**வசனம் 21.** லியான் மாரிஸ் (Leon Morris) என்பவருடைய கூற்றுப்படி, “பவுல் வர முடியுமா முடியாதா என்பதல்ல கேள்வி, ஆனால் அவர் எப்படி வருவார்” என்பதே கேள்வி.[9] பவுல் கொரிந்துவுக்கு திரும்பி வருகிறபோது என்ன மனநிலையோடு வருவார் என்பது கிறிஸ்துவின் போதனைகளை சபை ஏற்றுக்கொள்ளுகிற விதத்தைச் சார்ந்தது. **அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வர வேண்டும்** என்பதையே அப்போஸ்தலர் விரும்புகிறார். ஆனால் **பிரம்போடு** உங்களிடத்தில் வருவதற்கும் ஆயத்தமாக இருக்கிறார்.

## நடைமுறை பயன்பாடு

### உக்கிராணத்துவம்

அப்போஸ்தல ஊழியம் என்பது ஒருவிதமான உக்கிராணத்துவம், கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட ஆணையின் நிலைக்கு உயர்த்தப்படுதல். இயேசுவின் மரணத்தை தொடர்ந்த பல வருடங்களுக்கு அப்போஸ்தல ஊழியம் பிரத்தியேகமானதாக இருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ் துவை அறிக்கையிடுவதிலும் அவருக்கு கீழ்ப்படிவதிலும் உக்கிராணத்துவம் உள்ளடங்கியிருக்கிறது. உக்கிராணத்துவம் என்பது ஒரு அலுவலகம் அல்ல, ஆனால் அது ஒரு செயல்பாடு என்பதை பவுல் காலத்து மக்கள் நன்கு அறிந்திருந்தனர். உக்கிராணத்துவம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை (οἰκονόμος, *oikonomos*) புதிய ஏற்பாட்டில் 10 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்கா 12:42ல் இயேசு சொன்ன உவமையில் இந்த வார்த்தையின் பொருள் தெளிவாகிறது; “பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?” லூக்கா 16:1-12ல் ஒரு உண்மையில்லாத உக்கிராணக்காரனைப் பற்றிய இயேசுவின் உவமை ஒன்று சொல்லப்பட்டுள்ளது. கலாத்தியர் 4:2ல் NASB அந்த வார்த்தையை “மேலாளர்கள்” என மொழிப் பெயர்க்கிறது.

பெரிய தோட்டங்களின் உரிமையாளர்கள் சில சமயங்களில் தங்கள் சொத்துக்களை பராமரிக்கும் படி உக்கிராணக்காரனை நியமிக்கிறார்கள். அவர்களுக்கு சொந்தமானது என்று ஒன்றும் இல்லை. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை கவனிப்பதே அவர்கள் கடமை. பவுலின் அப்போஸ்தல ஊழியம்

உக்கிராணத்துவத்தின் ஒரு வகையானது, ஆனால் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களின் பொதுவான கடமைகளை சித்தரிக்கும் வார்த்தையாக “உக்கிராணத்துவத்துவம்” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, மூப்பர்கள் கிறிஸ்துவுக்குரிய ஒரு சபையின் ஆவிக்குரிய வாழ்வை மேற்பார்வையிடும் பொறுப்பை பெற்ற உக்கிராணக்காரர்களே (தீத்து 1:7). விசுவாசிகளை பரலோகத்திற்கு வழி நடத்துதல், மற்றும் அவர்களுக்கு போதித்து அவர்களை எச்சரிப்பது அவர்களுடைய கடமையாகும். கிறிஸ்து தனது சொந்த இரத்தத்தை சிந்தி சபையை சம்பாதித்தார். அவர் ஒருவரே சபையின் நடத்தையை, ஆராதனை முறையை, அதன் அருட்பணியை தீர்மானிக்க அதிகாரம் படைத்தவர். அவருடைய வருகை மட்டும், அவருடைய வழிகாட்டுதலின்படி சபையை நடத்திச் செல்லும் பொறுப்பு மூப்பர்களுக்கு உண்டு; அதாவது, மூப்பர்கள் கிறிஸ்துவின் உக்கி ராணக்காரர்கள்.

மூப்பர்கள் மட்டுமே உக்கிராணத்துவ பொறுப்புடையவர்கள் அல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையும் அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்கள் கடமையிலிருந்து வேறுபடுகிறது. தேவன் ஒவ் வொருவருக்கும் கொடுத்திருக்கும் வரங்கள் மற்றும் திறமைகளின் படி அவரவர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் (1 பேதுரு 4:10). உக்கிராணத்துவப்பணியை தழுவிக்கொள்ளாத ஒருவரும் கிறிஸ்துவை விசுவாசிக்க முடியாது. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல், உபசரித்தல், தேவனுடைய வார்த்தையை போதித்தல், பணிவிடை செய்தல் போன்றவைகளை தாலந்துகள் என்று பேதுரு சித்தரிக்கிறார். பின்வரும் சாதாரண செயல்களும் தகுதி பெறுகின்றன: அண்டைவீட்டாரை ஞாயிறு ஆராதனைக்கு அழைத்தல், வியாதிப்பட்டிருக்கும் ஒரு நண்பனுக்கு உதவிசெய்தல், பசியோடிருக்கும் ஒருவருக்கு உணவளித்தல், கஷ்டத்தில் இருக்கும் ஒருவருக்கு ஊக்கமளித்தல் போன்றவைகள் பல்வேறு பணிவிடைகள். தேவன் தன்னுடைய மக்களுக்கு பலவிதமான தாலந்துகளை தருகிறார். உக்கிராணக்காரன் உண்மையுள்ள வனென்று காணப்படுவது அவசியம் என்று (1 கொரி. 4:2) பவுல் எழுதுகிறார்.

### பிரசிங்கியார்களும் பிரசங்கமும்

கிறிஸ்துவின் சபையில் பணிவிடை செய்கிறவர்கள், போதிக்கிறவர்கள், மற்றும் வழிகாட்டுகிறவர்களுக்குள்ளே ஒரு நிச்சயமற்ற, சிக்கலான, உறவு இருப்பதை நாம் காணமுடியும். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பணிவிடைசெய்ய, போதிக்க, இயேசுவும் அப்போஸ்தலர்களும் முன்மாதிரியாக வைத்த வாழ்க்கைமுறையை பிரதிபலிக்க கடமை உள்ளவர்கள்; ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பலவீனங்களால் வாதிக்கப்பட்ட மண்ணால் ஆன சரீரத்தைக் கொண்டு

பணிவிடை செய்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்களுக்கு பணிவிடைசெய்கிறவர்களை குறித்து மிக உயர்ந்த எண்ணம் அல்லது மிக தாழ்வான எண்ணம் கொண்டிருக்கலாம். பிரசங்கியார்கள் போதிக்கிறவைகளை அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு. ஆனால், புரிந்துகொள்ளுதலின் கிருபையையும் மன்னிப்பையும் வழங்க தவறும்போது, ஒருவரும் தரமுடியாத முழு நிறைவை எதிர்பார்க்கின்றனர்.

ஒரு பிரசங்கியாரை மற்றொரு பிரசங்கியாருடன் ஒப்பிட்டு வேறுபடுத்தி அளவிடும் பழக்கத்தை நிச்சயமாக கைவிடவேண்டும். ஏனெனில், கர்த்தருக்கு பணிவிடைசெய்தல் என்பது மாரத்தான் ஓட்டத்தைப் போன்றதோ அல்லது ஒரு அலுவலகத்தில் பதவி உயர்வுக்காக போட்டியிடுவதைப் போன்றதோ இல்லை. பவுலும் அப்பொல்லோவும் அதுபோன்ற ஒரு சூழ்நிலையைத்தான் கொரிந்துவில் சந்தித்தனர். தன்னையும் அப்பொல்லோவையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போட்டி மனப்பான்மையை குறித்தே பவுல் இங்கு உரையாற்றுகிறார். "ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப் படையாதிருக்கவும்" (4:6) வேண்டுமென்று பவுல் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். ஒவ்வொருவரும் அவனவனுக்களிக்கப்பட்ட கிருபையின்படியும் தாலந்துகளைக் கொண்டும் பணிவிடைசெய்கிறார்கள். ஒருவர் மற்றொருவரை விட அதிக ஞானம் உடையவராக இருக்கலாம்; மற்றொருவர் சொற் பொழிவு திறமை பெற்றவராக இருக்கலாம். ஒவ்வொரு அங்கத்தினரும் தான் பெற்றிருக்கும் தாலந்துகளை கர்த்தருக்கென்று கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்.

சில விசுவாசிகள் பவுலின் சொற்பொழிவை அப்பொல்லோவின் சொற்பொழிவோடு ஒப்பிட்டு பவுலுக்கு எதிர்த்துப் போரிடுவதாகத் தெரிகிறது. பிடித்தமானவைகளை தெரிந்தெடுத்து முகாம்களாக பிரிந்து கிடக்கிறார்கள். இன்று சில சபைகளில் காணப்படுவது போல ஒவ்வொரு பிரசங்கமும் ஒரு போட்டியாக மாறியது. அதிக கலகலப்புடையவர் யார்? யாருடைய கதைகள் புத்திசாலித்தனமானது? பிரசங்கியார் தன்னை ஒரு கடினமான சூழ்நிலையில் காண்கிறார். பிரசங்கியார் ஒருவர் பிரசங்க முறையில் கவனம் செலுத்துவாரானால் அவரது பிரசங்கம் சலிப்பூட்டுவதாக, ஏவுதல் இல்லாததாக கருதப்படுகிறது. பிரசங்கத்தில் சிரிப்பலையை மையப்படுத்தினால் பிரசங்கம் கிறிஸ்துவின் போதனையின் சாராம்சத்தை இழந்துவிடுகிறது.

19-ம் நூற்றாண்டின் பிந்தைய பகுதியில், தாமஸ் ஹார்டி (Thomas Hardy), தி மேயர் ஆப் காஸ்டர்பிரிட்ஜ் (*The Mayor of Casterbridge*), என்னும் ஒரு நாவலை எழுதினார். அந்த நாவலில் நகரவாசிகள் ஒரு

ஞாயிறு பிற்பகல் வேடிக்கை நிகழ்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக சித்தரிக்கிறார்,

> உரையாடல் வாரநாட்களின் உரையாடலல்ல, ஆனால் அது விஷயத்தில் முழுமையாகவும், தொனியில் உயர்ந்ததாகவும் இருந்தது என்று ஹார்டி எழுதினார். அவர்கள் பிரசங்கத்தைக் குறித்து விவாதித்தனர், பகுத்துப்பார்த்தனர், சராசரிக்கு மேற்பட்டதா அல்லது சராசரிக்கு கீழானதா என்றும் அறிவியல் பூர்வமானதா என்று எடைபோட்டுப் பார்த்தார்கள். மற்றபடி பிரசங்கத்திற்கும், விமர்சிப்பவருக்கும், விமர்சிக்கப்படுபவருக்கும் எந்தவிதமான தொடர்பும் இருந்ததாக தெரியவில்லை.[10]

ஹார்டி வெளிப்படுத்திய விதமான காரியத்தை இன்றைய பிரசங்கியார்கள் தங்கள் அனுபவத்தில் பார்க்கிறார்கள். சமீப வருடங்களிலே, ஜேம்ஸ் மான்ட்கோமெரி போய்ஸ் (James Montgomery Boice) என்னும் பிரசங்கியார் தன்னுடைய பிரசங்கம் செய்யும் கடமையில் அவர் சந்தித்த ஏமாற்றத்தை பின்வருமாறு சித்தரிக்கிறார்:

> மக்கள் சபையை ஒரு பொழுதுபோக்கு இடமாக பார்க்கின்றனர். ஆராதனையை ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக நடத்துகிற சபை அதிகமாக வெற்றியடைகிறது. தேவனை பார்க்கும்படியாகவோ அல்லது கண்ணுக்குப்புலப்படாத தேவபிரசன்னத்தை உணரும் படியாகவோ, அல்லது ஆராதனை என்ன என்பதை புரிந்துகொள்ளும்படியாகவோ அல்லது ஆராதனை எப்படி நடத்தவேண்டும் என்பதை கற்றுக் கொள்ளவோ மக்கள் சபைக்கு வருகிறதில்லை; மாறாக அவர்கள் பொழுதுபோக்குக்காகவே சபைக்கு வருகிறார்கள் ...
>
> பிரசங்கியார்கள் நீண்டநேரம் பேசமுடியாது அல்லது தீவிரமாக இருக்க முடியாது, மேலும் இறையியல் பொருளை உள்ளடக்கிய வார்த்தைகளை பயன்படுத்த முடியாது. பிரசங்கம் உணரப்படும் தேவைகள் சார்ந்து அளவிடப்படுகின்றன. வேடிக்கையாக இருக்கவேண்டும் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் நடந்த கதைகள் சொல்ல வேண்டும்.
>
> தேவன் யார் என்று சபை கண்டுபிடிக்க வேண்டும், அவரை அறிந்து கொள்ள வேண்டும், அவருடன் நல்ல ஐக்கியத்தை உருவாக்க வேண்டும். அதற்கான ஒரே வழி பைபிள் விளக்கமும் போதனையுமே. அதற்கு வேறு ஒரு குறுக்குவழியும் இல்லை.[11]

சபையின் வாழ்வில் பிரசங்கித்தல் இன்றியமையாததாக காணப்படுகிறது (2 தீமோ. 4:1, 2). ஒரு பிரசங்கம் என்பது ஒரு சொற்பொழிவுக்கு மேற்பட்டது. அதுவே துதிசெய்தலும் ஆராதனையும். பிரசங்கத்தின் மூலமாக, சபையின் ஊழியக்காரர்கள் தேவபக்தியுள்ள வாழ்க்கைக்கான எழுப்புதலை ஏற்படுத்த தங்கள் தாலந்துகளை பயன்படுத்துகிறார்கள். பிரசங்கிப்பவர்கள் மிகச்சிறந்ததைக் கொடுக்க வேண்டும் என்று சபை எதிர்பார்க்க வேண்டும், அது போல சகோதரர்கள் ஒவ்வொருவருடைய திறமை யையும் ஏற்றுக்

கொள்ளவேண்டும். ஒரு பிரசங்கியாருக்கு எதிராக மற்றொரு பிரசங்கியாரை வைப்பதினாலும் தங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒருவர் பக்கம் சார்ந்திருப்பதினாலும் கிறிஸ்தவர்களுக்கு எந்த விதமான ஒரு பயனும் இல்லை.

## தாழ்மைக்கான ஒரு அழைப்பு

மனத்தாழ்மை என்பது அமைதியான, சாந்தமான ஒரு நல்லொழுக்கம். அதற்கு எதிரானது தற்பெருமையுள்ளது, சில சமயங்களில் சுயத்தை அறிவிப்பது. பவுலின் எதிரிகள், தங்களை "அகந்தைக்காரர்களாக" அடையாளம் கண்டு கொள்வது இல்லை. பெரும்பாலான மக்கள் மற்றவர்களிடம் மனத்தாழ்மை அல்லது அகந்தை இருப்பதாகத் தீர்ப்பளிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பண்புகளில் இருக்கும் குறைகளை கண்டறிவதில்லை. கொரிந்துவில் உள்ள பவுலின் விமர்சகர்களின் அகந்தையே அவர்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலனான பவுலுக்கு கீழ்ப் படியாததற்கு காரணம். அறுபத்தைந்து வருடங்களாக தன் மனைவியோடு வாழ்ந்துவருகிற தன்னுடைய தாத்தாவை விட அன்பு, காதல் மற்றும் திருமணம் பற்றி எனக்கு அதிகம் தெரியும் என்று சொல்லுகிற இளைஞனைப் போன்றவர்கள் தான் கொரிந்தியர்கள். நமக்கு முன் சாலையில் பயணம் செய்தவர் களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புதலே மனத்தாழ்மை ஆகும்.

அகந்தை என்பது சொந்த விருப்பங்கள் மீது அல்லது தீர்ப்புகளின் மீது மிகப்பெரிய மதிப்பை வைக்கும் மனப்பாங்கு ஆகும். இது ஒரு வெறித்தனமான தன்னம்பிக்கை ஆகும். முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் தேவனை மீறியதோடும் அல்லாமல், "நீ என்ன விரும்புகிறாய் என்று எனக்குத் தெரியும், ஆனால் அதை என் பாணியிலே நான் அதைச் செய்வேன்" என்று சொல்லும் அந்த செருக்கான பேச்சே அகந்தை. மாறாக, மனத்தாழ்மை என்பது, சுயத்தை கேள்விகேட்டு பிறரை மதித்தல் ஆகும். கிறிஸ்துவை கர்த்தராக ஏற்றுக்கொள்பவர்கள் மனத்தாழ்மையை ஒரு நற்குணமாக பறைசாற்றுவார்கள். ஐந்தாம் நூற்றாண்டில், உண்மையை எவ்வாறு பெறுவது என்பது பற்றி அகஸ்டின் பின்வரும் தீர்ப்பை வழங்கினார்: "முதல் வழி ... மனத்தாழ்மை; இரண்டாவது வழி மனத்தாழ்மை, மூன்றாவது வழி மனத்தாழ்மை, எத்தனை முறை கேட்டாலும், நான் இதையே சொல்லுவேன்."[12]

தாழ்மையுடன் இருப்பது தன்னைத்தானே யதார்த்தமாக மதிப்பிடுவதாகும், அது சிறிய காரியம் அல்ல. டேவிட் காப்பர் ஃபீல்ட்டின் உரியா ஹீப் தன்னைத்தானே "மிகத்தாழ்மையான மனிதர்"[13] என்றது போன்ற தன்னைத்தான் ஏளனமாக்கிக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடத் தேவையில்லை. உண்மையான

மனத்தாழ்மை என்பது இயேசு தன் சீஷர்களின் கால்களைக் கழுவியது போன்றது. மனத்தாழ்மை என்பது கர்த்தருடைய கரங்களில் இருக்கும் ஒரு குழந்தையைப் போன்றது; அது பவுல், "மரணத்துக்குக் குறிக்கப்பட்டு," "உலகத்திற்கு வேடிக்கையானது" (4:9). அது எரேமியா தனது தீர்க்கதரிசன அழைப்பில் சங்கடமாகவும் குழப்பமாகவும் காணப்பட்டாலும், பிரசங்கிக்க வேண்டும் என்ற அவருடைய தீர்மானத்தில் திடமாயிருந்தது. அது யோபு, வேதனையுடனும் கேள்விகளுடனும் துன்பப்பட்டபோதும், தேவனிடத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தது. மனத்தாழ்மை என்பது சேவை செய்வது, நம்புவது, மற்றும் ஆரவாரமின்றி கொடுப்பது ஆகும். கொரிந்துவிலிருந்த பவுலின் விமர்சகர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தங்களை மேன்மையாக காட்டிக்கொள்ள அதிகம் விரும்பினர். அந்த தேவபக்தியற்ற மனநிலையுடன், சபையில் ஒழுங்கின்மையையும் குழப்பத்தையுமே உருவாக்கினார்கள்.

---

குறிப்புகள்

[1]கிரேக்க போர்க்கப்பலின் அடித்தட்டில் துடுப்பை செலுத்தும் வேலைக்காரனை குறிப்பிடவே இந்த வார்த்தை தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்டது. ஆயினும், பவுல் தன்னுடைய வேலையை அந்த நிலைக்குத் தாழ்த்தி ஒப்பிட்டுச் சொல்லியிருப்பாரோ என்ற ஐயமும் உண்டு. (Karl H. Rengstorf, "ὑπηρέτης," in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Friedrich, trans. and ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972], 8:533.) [2]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 137. [3]இந்த வார்த்தை ἔσχατος (*eschatos*) கிரேக்க வார்த்தையிலிருந்து இருந்து வருகிறது, "கடைசி" என்று அர்த்தம், அதாவது கடைசி காலம் பற்றிய ஆய்வு. [4]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 642. [5]Adapted from Fee, 171. [6]நிலைப்பாட்டின் ஒரு பயனுள்ள சுருக்கம் Anthony C. Thiselton, "Realized Eschatology at Corinth," *New Testament Studies* 24 (July 1978): 510-26 கொடுக்கப்பட்டுள்ளது. [7]அவர்கள் கைகளால் செய்யப்பட்ட உழைப்பை ஒரு சாபமாகவும் துயரமாகவும் கருதுகின்றனர்; அவர்கள் அடிமைகளாக இருப்பதாக அவர்கள் நம்பினர். (Roger B. Hill, "Historical Context of the Work Ethic," 1999, accessed July 2, 2015, workethic.coe.uga.edu/historypdf.pdf.) [8]Donald A. Carson, *From Triumphalism to Maturity: An Exposition of 2 Corinthians 10-13* (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 2. [9]Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 82. [10]Thomas Hardy, *The Mayor of Casterbridge*, new ed. (London: Sampson Low, Marston, Searle, & Rivington, 1887), 309.

[11]James Montgomery Boice, "Exposition Not Entertainment," *Leadership* 14 (Spring 1993): 27. [12]Augustine *Letters* 118.22. [13]Charles Dickens, *David Copperfield*, The Works of Charles Dickens, vol. 14 (New York: Charles Scribner's Sons, 1899), 280.